# கதவை அடைத்தனள்



காரை. செ. சுந்தரம்பிள்ளை



காலை ஐந்து மணிக்கு மெழுந்தனள்
கையிற் காப்பி யுடன்வந் தமர்ந்தனள்
பாலை வென்றிடு முத்துச் சிரிப்பினை
பாய்ச்சினள் மிகப் பாசத்தோ டென்தனைக்
காலைத் தொட்டு வருடி யெழுடபினள்
காத லோடிரு வார்த்தையும் பேசினள்
வேலைக் கின்று புறப்பட வில்லையா
வெந்நீ ருண்டு குளிப்பதற் கென்றனள்.

ஓடி யாடி உதவி புரிந்தனள்
ஓர்க ணத்தினில் உண்டி அளித்தனள்
போடும் சட்டையைப் பூட்டியும் விட்டனள்
பொத்தான்போட்டென்தன் லோங்சையுந்தந்தனள்
தேடி ஆங்குள காலணி கண்டனள்
சீக்கிரம் துடைத்தென்னடி சேர்த்தனள்
ஆடும் பம்பரம் போல அவளுமே
அப்பப்பா பல சேவை புரிந்தனள்.

வாயில் வந்து வழியனுப்பினள்
வாஞ்சை யோடெனைப் பார்த்துமே நின்றனள்
நேய மோடிவள் செய்த பணிகளை
நெஞ்ச மீது நிறுத்திய வண்ணமே
போயி ருந்து அலுவ லகத்தினில்
பூர்ப் பொருயான சிந்தைக்க: இன்றொரு
தூய பொன்வளை வாங்கித் தருவதாய்
சொன்னசொல் எந்தன் காதில் ஒலித்தது.

மாலை நேரம் மணியு மடிக்க அம்
மாதச் சம்பளம் தன்னை எடுத்துமே
சாலை நோக்கி நடந்து கடையினை
தந்துள கடன் யாவுங் கொடுத்தபின்
நாலு காசும் மிஞ்சாத நிலையிலே
நாண மோடென் நொந்த படி இரு
காலுங் கையும் வருந்த நடந்துபோய்க்
காத்து நின்றவள் பாவையைக் கண்டனன்.

ஆசை யோடென தாருயிர் நாயகி
அத்தான் என்றனள் 'அந்தப் பொழுதிலே
நேச மோடுனைப் பார்த்தி ருந்தனே
நீண்ட நேரமாய் என்ன புரிந்தனை'
பாச மோடவள் கேட்க நடந்ததைப்
பச்சை யாகவே சொல்லி வெறுங்கையை
வீசி வந்துளேன் என்றிட முன் அவள்
விட்டுச் சென்று கதவை அடைத்தனள்.






அன்னம்மா வீட்டின் அருகில் இருக்கும்
தென்னஞ் சோலைக்குச் செல்பவர் பலபேர்,
கள்ளுச் சீவும் கந்தன் களவில்
ஊற்றிக் கொடுக்கும் உகந்த இடமது
சாதியிற் பெரியவர் தகுதியிற் பெரியவர்
நீதி பேசும் நீற்று நெற்றியர்
கந்தோரில் வேலைபார்க்கும் லிகிதர்கள்
பள்ளிக்கூட உபாத்திமார் ரியூற்றரிப்
பாடம் படிக்கும் பொடியள் எல்லாம்
கூடிக் குடித்துக் கும்மாளம் போடும்
வாடிக்கை யிட மிந்தத் தென்னஞ் சோலை
கேலிப் பேச்சும் கிண்டல் மொழியும்
வாலுகளோடு வயோதிபர் சிலபேர்
கலந்து கொண்டால் கலகலப்பதிகம்.

சுப்பரம்மான் சும்மா இருக்கார்
எப்பவும் சுருட்டை இழுத்த படியே
புளுகத் தொடங்கினல் பொழுதே விடியும்.

எனக்கு வயசோ எண்பத்து நாலு
என்ரை மனிசிக்கு எண்பது முடிஞ்சுது
அன்றைக்கு இருந்தது மாதிரி அவளும்
இன்றைக்கு மிருக்கின்ருள் என்று சொன்னல்
அன்றைய நாளையச் சாப்பாட்டைப் பற்றி
என்ன நினைக்கிறீர் என்று கேட்பர்.

பொய்யல்லத் தம்பி புதிசிலை அவளும்
ஒய்யார மாக உடுத்தா ளென்ருல்
மேனகை ரம்பை திலோத்தமை ஊர்வசி
ஆனைப்பட்ட திரைப்பட நடிகைகள்
எவருமே இவளுக்கு ஈடாக மாட்டார்.
எங்கடை ஊரிலை முதல் முதலாகப்
புசல்மா பூசிய பொம்பிளை இவள்தான்.

சுப்பரம்மான் சொல்லி முடித்துச்
சுருட்டை இழுத்தார்
தொடங்கினர் மூத்தர்

அந்தக் காலத்துப் படிப்புக் கிடாய்
இந்தக் காலத்துப் படிப்பு நிற்குமோ
பண்டித உபாத்தியார் சொல்லித்தந்த
பாடமின்னும் பால் போல் இனிக்குது
கந்தப்பு உபாத்தியார் காதைப்பொத்தித்
தந்தாரென்ருல் தந்தியடிக்கும்
என்ருலும் மனிசனுக் கிளகிய நெஞ்சம்
இரக்கம் படைத்தவர் இதய முள்ளவர்
எழுதிய கொப்பிகள் எழுத்தெண்ணி வாசித்து
திருத்தி மறுநாள் திருப்பிக் கொடுக்கும்
அந்த நாள் உபாத்திமார் ஆண்டவன் வடிவம்.
இந்த நாள் எவர்தான் இப்படிச் செய்கிருர்
மூத்தர் முடித்தார்
முருகர் தொடங்கினர்.

சினிமா ரீவி நாடகமென்று
மனிசர் சிலபேர் உயிரை விடுகினம்
அந்த நாளைய பாட்டுக் கூத்தும்
ஆடலும் பாடலும் பார்த்த எனக்கு
இந்த நாளையத் திரைப்படம் நாடகம்
எரிச்சலையல்லோ ஏற்பட வைக்கும்
கிட்டப்பா எம். ஆர். கோவிந்தசாமி
கரவெட்டி ஆழ்வார் கைவெட்டிச் சுந்தரம்
கன்னிகா பரமேஸ்வரி மீனலோசனி
சுந்தரம்பாளும் பாலாமணியும்
அந்தநாள் மேடையில் ஏறியே நின்று
சொந்தக் குரலில் பாடியே நடித்தால்
மந்த மாருதம் சிந்தையில் தவழும்
என்ருர் முருகர்
இருமிக் கொண்டே
சாப்பாட்டு ர ாமர் தம்பிப்பிள்ளை
தானும் ஏதாவது சொல்லாது விட்டால்
மானமே போகும் என்றிட்ட வாறு
பின்வருமாறு சொல்லி முடித்தார்.

குரக்கன் பிட்டும் ஒடியல் கூழும்
மரவள்ளிக் கிழங்கும் தின்ற வாய்க்கு
சோறும் கறியும் பாணும் கேக்கும்
சாப்பாடாமோ தம்பி மாரே!
பொறுமையோடு கேட்டுநின்ற
சிறுவன் கண்ணன் சிரித்துச் சொல்வான்

தாத்தாமாரே நீங்கள் சொல்வது
நூற்றுக்கு நூறு உண்மை, ஆனல்
உங்கள் சுவையும் எங்கள்சுவையும்
மாறுபட்டவை, வயதும் காலமும்
ஒத்திருக்காத காரணத்தாலே
இத்தகைப் பேதங்கள் இருப்பது உண்மை.

அன்று பொருந்திய யாவும் இன்று
நன்கு பொருந்துமோ? நாளும் நாங்கள்
காலத்திற்கேற்ற கருத்தை ஏற்றுக்
கோலத்தை மாற்றுதல் கொள்கையாய்க் கொள்வீர்

ஆயினும் அடிப்படை தன்னை மாற்ற
யாரையும் நாங்கள் கேட்கவேயில்லை
தாயின்றிப் பிள்ளையில்லை பிள்ளை
தாயாக மாறும் அதுவே உண்மை.
ஒன்றிலிருந்து ஒன்று பிறக்கும்
உலகம் அதனல் தொடர்ந்து நடக்கும்
இதுவே நியதி என்ருன் கண்ணன்

# நோகவிட்டான் இரும்பு நெஞ்சன் நாகநாதன்!

(காரை செ. சுந்தரம்பிள்ளை)

செந்தமிழை உயிராகக்
கொண்ட செம்மல்
தேசத்தைப் பொன்னாக
மதித்த பத்தன்
பைந்தமிழ்க் சீராக
வாய்ந்த தொண்டன்
பண்பினிலே நன்றாகப்
பழுத்த நண்பன்
எந்தையர்கள் முந்தையர்கள்
வழியைப் பேணி
இறுதிவரை தமிழுக்காய்
உழைத்துத் தேய்ந்து
நொந்த பொழுதும் உறுதி
குலையான் எம்மை
நோகவிட்டான் இரும்புநெஞ்சன்
நாக நாதன்!



வீரகேசரி.

# எத்தனை கற்றுமென்ன?

காரை செ. சுந்தரம்பிள்ளை

நீதிநூல் கற்ற போதும்
நிறை மொழி கேட்ட போதும்
வேத நூல் படித்த போதும்
வேறு நூல் ஆய்ந்த போதும்
ஆதி நூல் அறிந்த போதும்
அறிவு நூல் தெளிந்த போதும்
சாதி நூல் புரட்டு கின்றோர்
பாதி நூல் பார்த்த பேரே.

வானத்தை அளப்பதற்கும்
வையத்தைத் துளைப்ப தற்கும்
கானத்தைப் பதிப்ப தற்கும்
கடலினைக் கடப்ப தற்கும்
பாணத்தை விட்டு இந்தப்
பாரினை அழிப்ப தற்கும்
ஞானத்தைப் பெற்று விட்டோம்
ஞாயத்தை இழந்து விட்டோம்.

சந்திர மண்ட லத்தே
தாளினைப் ப தித்து மென்ன
அந்தரம் தன்னில் நீந்தும்
அறிவினை அடைந்து மென்ன
எந்திரம் கொண்டு யாவும்
இயற்றிடத் தெரிந்து மென்ன
சிந்தையை மாற்றி நன்மை
செய்திட அறிந்தோ மில்லை.

எத்தனை காலம் இந்த
இகத்தினில் வாழ்ந்து மென்ன
புத்தரை யேசு காந்தி
புனித நல் நபியை இந்தச்
சித்தரைக் கற்று மென்ன
சிந்தையில் மாற்ற மில்லை.
சத்தியம் தர்மம் நீதி
தரையினில் தழைப்பதென்றோ

# மனித உரிமையும் சிங்கள ஆட்சியும்

—காசி—அன்பன்

மண்ணில் வாழ்ந்திடும் மக்கள் உரிமையை
மாநிலத்தில் மதித்திட வேண்டியே
திண்ண மோடிங்கு ஐ. நா. சபையுமே
திட்டமிட்டோர் பிரகடனத் தையே
எண்ணிலாத மனிதர் பயன் பெற
இருபதோடைந்து ஆண்டுகள் முன்னதாய்
கண்ணியத்துடன் விட்டதை நாமெலாம்
கைகுவித்துமே வாழ்த்துகள் கூறுவோம்.

ஈழ நாட்டிலே சிங்கள ஆட்சியும்
இந்த நல்ல பிரகடனத்தையே
வாழிய எனவேவர வேற்றது
வையமீதில் தென் னாபிரிக்காவுமே
நாளுஞ் செய்த கறுப்பின வேற்றுமை
நன்று அன்றெனக் கூக்குரலிட்டது
வாழுகின்ற தமிழரை ஈழத்தில்
வாட்டுகின்றது; உரிமை மறுக்குது.

பயங்கரத்தை உலகில் விதைக்கும்
பலஸ்தீனர்க்கும் உரிமை வழங்கவே
தயங்கிடாது சிறிமா அரசினர்
தமிழ் இளைஞரைக் காரணமின்றியே
பயங்கரத்தினர் என்று சிறையிலே
பழி புரிந்திடும் தன்மையைக் காண்கிறோம்
அயல் நாடெங்கும் உரிமையைப் பேசிடும்
ஆட்சியாளரிங்க நீதி புரிகிறார்.

சோவியத்தில் எழுத்தாளனைச் சிறை
சோவியத்தினர் செய்ய உலகமே
பாவம் என்றிட; அன்னான் விடுதலை
பண்ணப் பட்டனன்; ஈழத்திலே ஒரு
பாவமே அறியாத கவிஞனே
பாழுகின்ற சிறையிலே வாடுறான்
நாவிலே ஒரு வார்த்தையும், செய்கையில்
நஞ்சும் கொண்டவர் ஈழத்தரசினர்.

பஞ்சத்தால் மலை நாட்டிலே மக்களோ
பாரை விட்டுப் பயணமே செய்கிறார்
கொஞ்சமாயினும் ஈவு இரக்கமோ
கொண்டிலாத அரசு, தன்மக்கட்கு
பஞ்சம் நீக்கி உணவு வழங்குதல்
பணியென்றேனே உணர மறுக்குதே
கஞ்சியின்றி ஒருவன் மடிவதும்
காரில் மற்றவன் செல்வதும் நீதியா.

ஆளுகின்ற உரிமையும் இல்லையேல்
அரைச்சதம் வரிநாம் தரோம் என்றுமே
வாழுகின்ற உரிமைக் குரலினை
வைத்தனர் அன்று போஸ்ரன் நகரிலே
பாழும் சட்டத்தால் தேர்தலே இன்றியே
பழிபுரிகிறார் யாழ்ப்பாண நகரிலே
நாளும் நாமோ வரியே கொடுக்கிறோம்
நம்மை ஆள உரிமை யிலார்க்குமே.

சாதியென்ற பெயரையே சொல்வது
சட்டபூர்வமாய்க் குற்றமாம் என்றொரு
நீதி செய்திடத் தமிழரும் கேட்டதை
நிராகரித்தது சிங்கள ஆட்சியே
சா[illegible] அரசோச்சிடும் அன்னவர்
தரணியில் மனித உரிமையைப் பேசுகிறார்
ஆதிமூலமே, ஆண்டவா, புத்தனே
ஐயகோ! சிங்கள ஆட்சியைப் பார்த்தியா?

10—12—74 மனித உரிமைகள் தினம்.

# மயக்கம்

-காரை செ. சுந்தரம்பிள்ளை

தந்தையும் தாயும் மயங்கியதாலித்
தரணியில் வந்துதித்தேன்— தூய
பைந்தமிழ் மாதின் மயங்கியதால் நல்ல
பாவலனாகிவிட்டேன் ஒரு
சுந்தரியாளில் மயங்கியதால் என்
சுதந்திரம் தானிழந்தேன்— நீண்ட
சந்ததி வேண்டுமென் றாசைப்பட்டேன் பெருஞ்
சம்சாரி யாகிவிட்டேன்.

கண்கள் மயங்கிய போதினிலே தூய
காதல் மலர்ந்ததம்மா — நல்ல
பண்கள் மயங்கிய போதினிலே இசைப்
பாடல் பிறந்ததம்மா—நெடும்
விண்ணில் கதிர்கள் மயங்கியதால் ஏழு
வண்ணம் பிறந்ததம்மா—மக்கள்
எண்ணம் மயங்கிடு போதினில் மதியும்
இருள் வந்து சூழ்ந்ததம்மா

ஆடம்பரத்துடன் வாழ்பவர் வாழ்க்கையே
அந்தஸ்து என்றிருந்தேன் — போலி
வேடம் புனைந்தவர் தோற்றத்தை மெய்யென்று
மெச்சி நிலை தளர்ந்தேன் — நல்ல
ஓடமிருந்திட நீரில் நடந்தவன்
உற்ற துயரடைந்தேன் — சுவைத்
தோடம் பழத்தை எறிந்து நாரத்தை
சுவைத்தவனாகி விட்டேன்

மண்ணாசை கொண்டு மயங்கியதால் நல்ல
மனிதரை நானிழந்தேன்— பல
பெண்ணாசை கொண்டு பிசகியதால் என்
பெருமைகள் தானிழந்தேன் — அரும்
பொன்னாசை யுற்றே யலைந்ததனால் பெற்ற
பேர் புகழ் தானிழந்தேன் — தாக்கும்
என்னாசைகட்கே விடங் கொடுத்திட்டதால்
யாவு மிழந்துநின்றேன்

பட்டம் பதவி மயக்கிட ஆசைகள்
பற்றிப் பிடித்ததுண்டு —பிறர்
கொட்டம் அடக்கிட எண்ணிய தாலென்
குணத்தை இழந்ததுண்டு — என்றும்
எட்ட முடியாப் பொருளை யடைந்திட
ஏங்கித் தவித்ததுண்டு —அது
கிட்டவில்லை யென்ற போதினில் என் மனம்
கேவியழுததுண்டு.

கள்ளு மயக்கிய போதினிலே பலர்
காறி உமிழ்ந்ததுண்டு—பெற்ற
பின்னை மயக்கிய போதினிலே பொருட்
பெட்டி மெலிந்ததுண்டு—பிறர்
சொல்லில் மயங்கிய போதினிலே சேர்த்த
சொத்துக் கரைந்ததுண்டு— தேர்ச்
சில்லில் அகப்பட்ட கன்றினைப் போல் மனம்
சிக்கித் திகைத்ததுண்டு.

ஆணவம் கொண்டே யலைந்து திரிந்தேன்
அறிவை யடகு வைத்தேன் — கண்ணில்
காணும் பெரியவர் மற்றவர் யாவரும்
கடுகு மனிதரென்றேன்—அன்பு
பூணும் நெறிவிட்டகன்று மயங்கி வீண்
பூசல்கட் காகிவிட்டேன்—துயர்
காணும் மயக்கம் தெளிந்து விட்டேன் புது
மானிட னாகிவிட்டேன்.

வீரகேசரி 18-12-83

# அகந்தை மட்டும் தீரவில்லை



காரை: செ. சுந்தரம்பிள்ளை

எதையெதையோ பேசுகிறோம்
எதையெதையோ செய்கின்றோம்
இதயமெனும் கோயிலிலே
இருப்பவனை மறக்கின்றோம்.

புதிய தொன்றைச் செய்தமெனப்
புளுகி நிதம் திரிகின்றோம்
புதிய தென்ப துண்மையிலே
புவியினுக்குப் பழையதுவே.

அது செய்வோம் இது செய்வோம்
அக்கினியைப் பனி செய்வோம்
மதி செய்வோம் என்கின்றோம்
மானுடத்தை மறக்கின்றோம்.

கருணை யற்ற உள்ளங்கள்
கபட முள்ள நெஞ்சங்கள்
சிறுமை மிகு பேச்சுக்கள்
தீயுமிழும் ஊற்றுக்கள்.

ஆராரோ வருகின்றார்
ஆராரோ போகின்றார்
சீரான வாழ்க்கையினைச்
சிலபேரே வாழ்கின்றார்!

வானாளும் வாழ்க்கையினை
வையகத்தார் விழைகின்றார்
ஆனாலும் மாந்தருக்கு
அகந்தை மட்டும் தீரவில்லை!

வீரகேசரி. 28-1-79.

# அதுவும் இதுவும்

( காரை செ. சுந்தரம்பிள்ளை )

நல்லவை செய்திடு கின்றவரும் சில
அல்லவை செய்தலுண்டு — பல
தொல்லைகள் செய்திடு கின்றவரும் சிறு
தொண்டு புரித லுண்டு!

ஆலமரத்தி னடியினிலும் நச்
சரவம் இருத்த லுண்டு — கொடும்
பாழும் நிலத்தி னடியிலும் தங்கப்
பாளம் கிடத்த லுண்டு!

கொல்லும் மதயானைக் கொம்பினிலும் முத்துக்
கூடியிருத்த லுண்டு — விழி
வெல்லும் இளமை மகளிர்தம் நெஞ்சிலும்
வேற்றுமை எண்ண முண்டு!

சுட்டுப் பொசுக்கிடும் அக்கினியும் நல்ல
தொண்டு புரித லுண்டு — நாட்டில்
கொட்டும் பெருமழை கூட உலகினைக்
கொன்று குவித்த லுண்டு!

பட்டினி யாலுடல் வாடும் பொழுதினில்
பாவம் தொலைத்த லுண்டு — நன்கு
கொட்டி வயிற்றை நிரப்பும் பொழுதினில்
குற்றம் பெருக லுண்டு!

சட்டம் எனும் வலை கூட அதர்மம்
தழைக்க விடுத லுண்டு — தன
திட்டப்படி யரசாளு வோன்கூட
இனியன புரிதலுண்டு!

நல்லன தீயன எங்குமே யுண்டிது
ஞாலத் தியற்கை யம்மா — மதி
செல்லும் வழியினில் செல்லும் மனிதர்க்கே
தீயன இல்லை யம்மா!

வீரகேசரி
18- 2 - 79

# இராமநாதன்...

[7ஆம் பக்கத்தொடர்ச்சி]

"சொகா சுகா மிருதங்க" என்னும் உருப்படி மிக நன்றாக அமைந்து கச்சேரியை களை கட்ட வைத்தது. சுரக் குறைப்பும் நிரவலும் அழகாக அமைந்தன. சமகங்கள் இனிமை பேசின. மாலினி பாராட்டப்பட வேண்டியவள்.

மூன்றாவதாக திரு. ஆ. சத்திய சீலனின் வீணைக் கச்சேரி இடம் பெற்றது. கடந்த வருடத்தை விட இந்த வருடம் திரு. சத்திய சீலனின் கச்சேரி நன்றாக அமைந்தது. சமகங்களும் நன்றாக உள்ளன. ஆட மோடீ கலதே என்னும் சாரு கேசி ராக ஆலாபனை சிறப்பாக அமைந்தது.

மூன்றாவது அம்சமானவயலின் கச்சேரி குறிப்பிடத் தக்கது. முதலாவதாக திருமதி ஞானம்பிகை பத்மசிகாமணி வயலின் இசைமாரி பொழிந்தார். மிகவும் அற்புதமாய கச்சேரியாக இது அமைந்தது.

சின்னஞ் சிறு கிளியே என்னும் ராகமாலிகையில் எத்தனை சங்கதிகள். திருமதி ஞானம்பிகைக்கு ஒரு சபாஷ் ............!

அடுத்த செல்வி பாக்கிய லட்சுமி நடராஜா. இவருடைய வாசிப்பில் இப்பொழுது நல்ல முன்னேற்றம் இருக்கிறது. ஸரஸ்டா என்னும் சாவேரி ராக வர்ணம் நன்றாக இசைக்கப்பட்டது.

விரிவுரையாளர்களை விட வெளிக் கலைஞர்களும் பக்க வாத்தியம் இசைக்க அழைக்கப்பட்டிருந்தனர். இவர்களுள் திரு. ஏ. சந்தான கிருஷ்ணன், மிருதங்க வித்வான் எஸ். மகேந்திரன், வளர்ந்து வரும் கலைஞர் ஏ.ஜி.ஏ. ஞானசுந்தரம் ஆகியோர் மிகவும் அனுசரணையாக வயலின் இசைத்தார்கள்.

திருமதி ஞானம்பிகை பத்ம சிகாமணியின் வயலின் இசை மிகவும் சிறப்பாக அமைந்தமைக்கு பக்க வாத்தியமாக மிருதங்கம் வாசித்த திரு. பி. சின்னராசா அவர்களும் முக்கிய காரணர் ஆவர். திரு. சின்னராசா அடக்கமாகவும் பக்குவமாகவும் அனுசரணையாகவும் மிருதங்கம் வாசிக்கும் ஆற்றல் பெற்றவர். இவர்களைத்தவிர நுண்கலைக் கழகத்தின் பழைய மாணவர்களாகிய வி. ஐயநாதன், எஸ். வரதராஜன், ஜே. சண்முகானந்த சர்மா ஆகியோர் அழகாக கஞ்சிரா வாசித்தார்கள்.

வீரகேசரி
07-02-82

# வாழிய ஆயிரம் ஆண்டுகள்

ஈழத்தமிழர் தம் நெஞ்சில் நிறைந்திடும்
எம் தமிழ் நாயகியே
வாழும் தமிழர் கலை கலாச்சாரம்
வளர்த்திடும் தாய்வளே
நாளும் புதிய புதினங்கள் தந்திடும்
நன்மகள் போன்றவளே
வாழிய பல்லாண்டு நீதி தழைத்திட
வையக மீதினிலே

தியவை கொன்றிடும் உந்தனைத் தியவர்
திர்க்க முயன்றிடினும்
நேயமாய் இருபத்து நாலாண்டை எய்தியே
நீதி வழி நடக்கும்
தாயவளே எங்கள் துன்பங்களை போக்கிடத்
தொண்டு புரிபவளே
ஆயவை யாவும் எமக்கீந்து வாழிய
ஆயிரம் ஆண்டுகளே.

காரை செ. சுந்தரம்பிள்ளை

ஈழநாடு